முருகப்பெருமான் துணை

**மகான் காரி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.07.2022, செவ்வாய்கிழமை

1. அன்னதான வள்ளல் பெருமானே
ஆறுமுகனார் சொரூப அரங்கனே
மண்ணுலகை காக்கும் சக்தியாக
மாதவம் புரிந்த தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது மிதுன திங்கள்
ஆசிபட எழுநான்கு திகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 28 நாள், 12.07.2022 செவ்வாய்கிழமை)
அருளாசிதனை காரி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் ஞானம் தந்தருளுகின்ற
ஞான தேசிகனின் வழிகள்தனை
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே உலகம் எங்கிலும் இனி
வள்ளல் பெருமான் ஆசி
தருமமாகப் பெருகி இனிதே
தரணியே புதுமை காண்கும்
5. காண்குமே அமைதியும் பாதுகாப்பும்
கருணை வடிவான செயல்பாடுகள்
ஆன்மீக ஞான வழி சேவையாக
அதிகாரிகள் ஆளுமைகள் அனைத்திலும்
6. அனைத்திலும் மாற்றம் காண்கும்
அரங்கமகான் தேடுகின்ற உயர்
ஞான வழிகளைக் கொண்டே உலகில்
ஞானவான்கள் படைகள் பெருகி
7. பெருகியே பேருலகம் தானும்
பெருமை மிக்க ஞான ஆட்சி
முருகப் பெருமான் தலைமைகொண்ட
முழுமை ஞான ஆட்சியாக மாறும்
8. மாறுதலை செய்யும் சக்தியாக
மாதவசியாக அரங்கமகான்
ஆறுமுகனார் வழிபாட்டை பெருக்கி
அற்புதத்தை நடத்தி வருக
9. வருகவே முருகப் பெருமானும்
வல்லமைபட சக்தியாக இறங்கி
தருமமும் சன்மார்க்கம் எனும்
தயவும் சிறந்து இனிதே

10. இனிதே கலியுகம் தானும்
இணையில்லா ஞான யுகமாக
கனிவேலவன் அருளால் மாறும்
கலியுக ஞானி அரங்கன் வழி காட்டலில்

11. வழிகாட்டலில் உலகோர் தேறி
வந்தடையும் உலகே ஞானபலம்
அழியாமை கொண்ட மகாசக்தியாக
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–